IBRARY
2 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ண்டாம் வருட/ இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013/2014
(ஒக்டோபர் / நவம்பர் 2016)

# TLS 2223 யாப்பும் அணியும்

## Yappu & Alankara

: 03 மணித்தியாலயங்கள்

**ாம் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள எவையேனும் ்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

<u>பகுதி – 1</u>

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

அ) நேர் நேர், நேர் நிரை, நிரை நேர்
நிரை நிரை ஆகியவை வேறெப் பெயரால் அழைக்கப்படும்?

ஆ) மோனைத் தொடை என்பது யாது? உதாரணம் தருக.

இ) தளை என்றால் என்ன?

ஈ) குறளடி, சிந்தடி, அளவடி ஆகியவை முறையே எத்தனை சீர்கள் கொண்டவை?

உ) தெளிதேன் என்பதனை அசைகளாகப் பிரித்து அதன் வாய்பாட்டைக் கூறுக.
(5x3= 15 புள்ளிகள்)

ஊ) பின்வரும் செய்யுளை
i) முறைப்படி எழுதி,
ii) உறுப்புக்கள் அமையுமாறு பிரித்து,
iii) வாய்பாடுகளையும் தருக. (15 புள்ளிகள்)

போதி நிழலமர்ந்த புண்ணியன் போலெவ்வுயிர்க்கும்
தீதிலருள் சுரக்கும் சிந்தையானாதி வருதன்மம்
குன்றாத மாதவன் மாக்கோதையொடு தர்மபாலனுளன்

(15 + 15 = 30 புள்ளிகள்)

02) பின்வரும் செய்யுட்களில் பயின்றுள்ள அணிகளை இனங்கண்டு விளக்குக.

அ) வைகலும் வைகல் வரக்கண்டு ம.்.துணரார்
வைகலும் வைகலைவைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணராதார்

ஆ) நாற்குணமும் நாற்படையா ஐங்குணமும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா – வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மையரசு

இ) கரைபுரண்டுள்ளகங் களித்துக் கானிடைத்
திரவியந் திரைக்கரத் தெடுத்துச் சிந்தியே
குரைகட லெனுநதி குரிசினந்நபி
மரைமல ரடிதொழ வந்தபோலுமே

(30 புள்ளிகள்

## பகுதி – 1I

03) வெண்பா **அல்லது** ஆசிரியப்பா வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினையும் விளக்குக. (20 புள்ளிகள்)

04) கலிப்பா **அல்லது** வஞ்சிப்பாவினங்கள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்

05) காவியங்களின் அமைப்பு பற்றி தண்டியலங்காரம் கூறுவதை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

06) உருவக அணி என்றால் என்ன என்பதை எடுத்துக் கூறி அதன் வகைகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

*******************************************